## 1.1 பாதகமான அபிப்பிராயம்

இலங்கை மட்பாண்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### விடயங்களை கருத்திற் கொள்ளல்

எனது அபிப்பிராயத்திற்கு மேலதிகமாக நிதிக்கூற்றுக்ககளைத் தயாரிக்கும் போது தொடர்சசியான அடிப்படை தொடர்பாக கற்பனையாக நிதிக்கூற்றுக்களின் 22 ஆம் இலக்கத்தின் மீது கவனத்தை செலுத்துமாறு கோருகின்றேன்.அதன் பிரகாரரம் 2020 சனவரி மாதம் முதல் சபையின் முறையான செயற்பாட்டிற்காக கைத்தொழில் அமைச்சு மற்றும் திறைசேரியினதும் ஒரு முகவர் வீதம் உள்ளடங்களாக தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டது. அவ்வப்போது பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் சபையின் செயற்பாடுகள் மிகவும் கிட்டிய வகையில் அவதானிக்கப்பட்டன. விற்பனை செயற்பாடுகளை மேம்படுத்துதல், அசையாத உற்பத்தி இருப்புக்களை குறைத்தல் மற்றும் காசு நிலைமையை மேம்படுத்துதல் முன்னேற்றம் கண்டுள்ளது. இவ்வாண்டில் அம்பாறை கைத்தொழிற்சாலையின் உற்பத்தி இயலளவு 50 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் இலங்கை தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக அம்பாறை தொழிற்சாலையின் கூரை ஒடுகள் மாதிரிகள் தற்போது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் மூடப்பட்டிருந்த மஹியங்கன தொழிற்சாலை 2020 யூலை மாதத்தின் போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது. மட்பாண்டங்கள் மற்றும் சிங்கள ஓடுகள் போன்ற புதிய உற்பத்திகள் 2020 நவம்பர் மாதத்திலிருந்து மஹியங்கன தொழிற்சாலைக்கு சேகரிக்கப்படுகின்றன. சபையின் பணத்தை பயன்படுத்தி ஒட்டுசுட்டான் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் 20/0989/224/002-1 மற்றும் 2020 யூலை 09 ஆந் திகதிய அமைச்சரவை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஒட்டுசுட்டான் தொழிற்சாலையின் மீளமைப்பு செயற்பாடுகளில் 70 சதவீதமான அளவு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2020 நவம்பர் மாதம் இறுதியளவில் உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஆதலால் முன்எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் சபையை கலைப்பதற்கு சபையினால் தீர்மானிக்கப்படவில்லை. ஆதலால் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து இயங்குதல் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா

எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் பேணிச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 20 (பீ) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஒதுக்கீடு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சலுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டின் போது உபகராப் படிகள் மற்றும் கணக்காய்வுக் கட்டணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,898,473 கூட்டுத்தொகையான ஒதுக்கீடு காசுப் பாய்ச்சலுக்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். | நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 16 (பீ) பிரிவின் பிரகாரம் காசுப்பாய்ச்சலில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். | நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று |

| | | | |
|---|---|---|---|
| | காசுப்பாய்ச்சல் வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதும் சபையின் ஆதனங்கள் விற்பனை மூலம் கிடைத்த ரூபா 2,476,000 தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலில் பதிவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,500,000 ஆன முதலீடுகள் முதலீட்டு செயற்பாடுககளிலிருந்து உருவாகும் காசுப்பாய்ச்சலொன்றாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் ஆம் 79(பீ) பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனம் தற்போது பயன்படுத்தும் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள ரூபா 19,801,521 கூட்டுப்பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் சரி செய்கின்றேன். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 104 பிரிவு மற்றும் நியம இலக்கம் 19 இன் 25 ஆம் பிரிவின் பிரகாரம் தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,261,383 ஆன ஊழியர் நலன்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அடுத்தாண்டில் இருந்து சமர்ப்பிக்கின்றேன். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 36 (சீ) மற்றும் (டீ) பிரிவுகளின் பிரகாரம் ரூபா 389,871 ஆன இருப்பு தொடர்பான சீராக்கங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சரி செய்கின்றேன். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய பங்கதெனிய காணி மற்றும் வேஉட தொழிற் சாலைக்குரிய காணி, கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்களின் பெறுமதி ரூபா 2,895,948 என மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் பதிவு | எதிர்வரும் காலங்களில் சரி செய்கின்றேன். | மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி அளவில் இக்கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2019 யூலை 25 ஆந் திகதிய விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 173,882,500 இற்கு இச்சொத்துக்கள் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அம்மதிப்பீட்டுப் பெறுமதி 2019 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்காமையால் நடைமுறை யல்லாத சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் நிதிக் கூற்றுக்களில் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீனாய்வாண்டில் யட்டியன மற்றும் ஏரகம தொழிற்சாலைகளில் ரூபா 1,798,550 ஆன உற்பத்தி செலவினம் நிதிக்கூற்றுக்களில் தாபன மற்றும் நிர்வாக செலவினமாக பதிவு செய்தமையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் மொத்த நட்டம் ரூபா 1,798,550 கூடுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் செலவினம் வகைப்படுத்தப்பட்டு சரியாக பதிவுசெய்யப்படும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அட்டுறு செலவினங்களின் கீழ் ஏரனகம தொழிற்சாலைக்காக ரூபா 61,505 ஆன தொங்கல் கணக்கில் செலவு மீதியொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது. ஏரகம தொழிற்சாலையின் பௌதீக மெய்மையாய்வு சபை அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,305,335 ஆன விறகு இருப்பு, விறகு இருப்புக் கணக்குடன் சரி செய்வதற்காக ரூபா 61,505 தொகை விறகு இருப்பு கணக்கு வரவு வைக்கப்பட்டு தொங்கல் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் இப் பேரேட்டுக் கணக்குகள் சீராக்கம் செய்யப்படாமல் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கணக்கை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் வாகன வாடகைக்காக செலுத்தப்பட்ட ரூபா 150,000 ஆன காசோலையொன்றை இரத்துச் செய்யும் போது அந்த இரத்துச் செய்தல் வாகன திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புக் கணக்கில் பதிவு செய்தமையால் அக்கணக்கின் பெறுமதி ரூபா 150,000 ஆல் குறைத்தும் வாகன வாடகை கணக்கின் பெறுமதி ரூபா 150,000 ஆல் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டினுள் வாகன வாடகையான கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 150,000 தொகை கட்டிட காப்புறுதி கணக்கில் பதிவுசெய்தமையால் கட்டிட காப்புறுதி கணக்கின் மீதி ரூபா 150,000 ஆல் அதிகரித்தும் வாகன வாடகை கணக்கின் பெறுமதி ரூபா 150,000 ஆல் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | கொடுப்பனவு களுக்குரிய செலவினங்களை கணக்கீடு செய்யும் போது சரியான கணக்கில கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முற்பண வைப்புக்கள் மற்றும் முற் கொடுப்பனவு கணக்குகளில் இடம் பெற்ற ரூபா 987,315 கூட்டுத்தொகையான நிதி உட்பாய்ச்சல் நிதி வெளிப் பாய்ச்சலாக பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆண்டில் அட்டுறு செலவினக் கணக்குகளில் இடம்பெற்ற ரூபா 548,317 கூட்டுத் தொகையான வெளிப்பாய்ச்சல் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சலாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நியமத்தின் பிரகாரம் சரியாக காசுப்பாய்ச்சல் இனங்காணப்பட்டு நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | காசுப் பாய்ச்சல் கூற்றுக்கு தொழிற்படு மூலதன மாற்றல் சீராக்கம் செய்யும் போது வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய கணக்குகளில் மீளாய்வாண்டில் குறைவு ரூபா 45,250 குறைத்து சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. மேலும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளில் மீளாய்வாண்டின் போது ரூபா 422,296 கூட்டுத்தொகையான அதிகரிப்பொன்று காணப்பட்ட போதும் அப்பெறுமதி குறைவொன்றாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நியமத்தின் பிரகாரம் சரியாக காசுப்பாய்ச்சல் இனங்காணப்பட்டு நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் முன்னைய ஆண்டின் சீராக்கம் உரிமை மாற்றல் கூற்றில் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக் கணக்கில் ஆரம்ப மீதிக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதும் ரூபா 532,970 ஆன முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வு கட்டணங்களுக்கான நிதிஏற்பாடு மீளாய்வாண்டின் இலாபம் பதிவழிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இலாபமும் குறைத்து நிறுத்தி வைத்த உழைப்புக் கணக்கின் மீதி கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2004 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்களின் பெறுமதி ரூபா 3,415,526 ஆக இருந்தது. எனினும் மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்களுக்காக நிதி ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,497,766 ஆக இருந்தமையால் ரூபா 917,760 குறைத்து கணக்காய்வு கட்டணங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்கின்றேன். | பதிலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஐ) | 2018 ஆம் ஆண்டின் போது விற்பனை விலைக்கு கணக்கிடப்பட்ட இருப்பின் பெறுமதியை சரிப்படுத்துவதற்காக் அந்த இருப்பின் பெறுமதி கிரயத்தினை கணக்கிடும் போது இனங்காணப்பட்ட ரூபா 43,061 ஆன இருப்பு வேறுபாடுமுன்னைய ஆண்டின் நிறுத்திவைக்கப்பட்ட இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதும் அப்பெறுமதி மீளாய்வாண்டின் போது உற்பத்திக் கிரயமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 43,061 ஆல் குறைத்தும் நிறுத்தி வைத்தல் உழைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி கூடுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | இப்பெறுமதி முன்னைய ஆண்டின் நிறுத்தி வைத்த இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டு மீளாய்வாண்டின் உற்பத்திக் கிரயம் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மீளாய்வாண்டின் போது அலயாபத்துவ வேவுட, பங்கதெனிய மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய தொழிற்சாலைகளில் எவ்வித உற்பத்திகளும் மேற்கொள்ளப் படவில்லை. எனினும் மீளாய்வாண்டில் சபையின் தலைமை அலுவலகத்தினால் அத் தொழிற்சாலைகளுக்காக செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 1,631,075 உற்பத்தியல்லாத நிர்வாக செலவினம் அத் தொழிற்சாலைகளின் மொத்த இலாபத்தை கணிப்பிடும் போது விற்பனை பொருட்களின் கிரயமாக கழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விற்பனை பொருட்களின் கிரயம் கூடுதலாகவும் தாபன மற்றும் நிர்வாக செலவினம் குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | தொழிற்சாலைகளின் உற்பத்தியல்லாத நிர்வாக செலவினம் வருமானக் கூற்றில் தாபன மற்றும் நிர்வாக செலவினமாக பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | 2020 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் செலுத்திய 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 540,760 ஆன தொகை நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய செலவினங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதியம் ரூபா 15,792 ஐ கூடுதலாக கணக்கீடு செய்து நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | ஆண்டின் செலுத்த வேண்டிய செலவினம் சரியாக இனங்காணப்பட்டு நிதக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட வேண்டும் |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| வியாபார பொருளிருப்பு | 7,843,027 | 8,005,465 | 162,438 | தொழிற்சாலைகளில் களஞ்சிய அறிக்கைகளில் தவறுகள் காரணமாக வேறுபாடொன்று காட்டுகின்றது. | இருப்பு அறிக்கை சரியாக வைக்கப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | செலுத்த வேண்டிய மொத்த வரி | 175,156,656 | வரிக் கோவைகள் மற்றும் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். | வரி பெறுமதிக்கான போதியளவு எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வியாபார மற்றும் ஏனைய கடன் பட்டோர். | 50,208,755 | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான கடிதங்கள் மற்றும் கடன் கோவைகள். | இந்த விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகளை கொடுத்து தீர்ப்பதற்கும் செலுத்த தேவையற்ற பெறுமதியை இனங்கண்டு கணக்குகளை சீராக்குவதற்கும் செயற்பட வேண்டும். |
| (இ) | காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் | 38,884,096 | சொத்துப் பதிவேடு மற்றும் கணிப்பீட்டு சபை அறிக்கை | சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை. கணனி மயப்படுத்திய பதிவேடுகளை சமர்ப்பிக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் பதிவேட்டை பராரிப்பதற்கும் வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 23,755,784 | உரிமை ஆவணம் மற்றும் ஏனைய சட்டப்படியான ஆவணங்கள் | 44 (1) பிரகாரம் பொருப்பேற்க நடவடிக்கை எடுக்கப்படும் | பதிலுக்கு அமைய செயற்படுவது பொருத்தமானது. |
| (உ) | தொழிற்சாலைகளின் பராமரிப்பு கிரயம் | 716,595 | தொழிற்சாலைகளின் பராமரிப்பு செலவின விபரங்கள் | விபரங்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. | புதிலின் படி நாட குறிப்புடன் ஆதாரங்கள் இணைக்கப்படவில்லைஇ அவை சமர்பிக்கபட வேண்டும். |
| (ஊ) | மக்கள் தோட்ட அபிவிருத்தி | 5,000,000 | மீதி உறுதிப்படுத்தல் | உரிய கடிதங்கள் இதனுடன் | பதிலாக 2012 ஆம் ஆண்டில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சபையில் பெற் வேண்டிய மீதிகள் | | சான்றுகள். | இணைக்கப்பட்டுள்ளன. | கையொப்பமிட்ட கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்ப வேண்டும். |
| (எ) | ஒட்டுசுட்டான் தொழிற்சாலை யில் காணப்பட்ட வாகனங்கள் | 638,425 | பௌதீ கணிப்பீட்டு சபை அறிக்கை | யுத்த சூழ்நிலையால் இவ்வாகனங்கள் சேதமடைந்துள்ளன. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் பதவேடுகள் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) பிரிவு | 2019 ஆண்டிற்காக பாதிடப்பட்ட பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பதிலின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 9.10 பிரிவு | இந்த பிரிவின் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் தகைமை வாய்ந்த அதிகாரியால் 35 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஊழியர்களில் 16 பேர் 2019 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | அரசின் சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த சுற்றறிக்கையின பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 4.2.6 ஆம் பிரிவு | இந்த பிரிவின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் திறைசேரிக்கு முன் வைக்க வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 9.2 (ஏ), 9.2(பீ) மற்றும் (டீ) பிரிவுகள் | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணி தேவையொன்றை இனங்காணல், பதவியணியினரை அனுமதித்தல் மற்றும் நிறுவனத் திட்டமொன்று தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் 2010 யூலை 01 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டு வரை மேற்கொள்ள ப்பட்டிருக்கவில்லை. | பதவியணியை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2017 திசெம்பர் 11 ஆந் திகதிய பீஈடீ 03/2017 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவு | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமல் ரூபா 499,500 தொகை 2017 ஆம் ஆண்டில் உபகாரப்படிகளாக மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தகைமை வாய்ந்த அதிகாரியின் அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டன.. | இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 செப்தம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ 01/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | இச்சுற்றறிக்கைக்கு முரணாக சபையின் தகைமை வாய்ந்த அதிகாரிக்கு மாதமொன்றுக்கு ரூபா 150,000 வீதம் வாடகை அடிப்படையில் மோட்டார் வாகன மொன்றை வழங்கியமைக்காக ஆண்டினுள் ரூபா 1,800,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். | இந்த சுற்றறிக்கையின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் 06 தொழிற்சாலைகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் ஈடுபடுத்தாத 18 வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதும் அங்கீகாரம் கிடைக்கவில்லை. | பதிலின் அடிப்படையில் செயற்பட வேண்டும். |
| (ஊ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5(1) பிரிவு மற்றும் 5.2 பிரிவு | இச்சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்காக 2012 ஆம் ஆண்டு தல் 2019 ஆம் ஆண்டு வரை கூட்டிணைந்த திட்டமொன்றும் செயல்நடவடிக்கைத் | இதனை எதிர்காலத்தில் சீராக்கம் செய்யப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்றும் செயல்நடவடிக்கை கத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | திட்டமொன்றும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 257 | மீளாய்வாண்டின் சனவரி முதல் செப்தம்பர் வரையான காலப்பகுதிக்குரிய 601 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் திசெம்பர் மாதத்திற்குரிய 09 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உட்பட சான்றுறுதிப்படுத்தாத 610 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கு ரூபா 57,822,791 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். தற்போது சரி செய்யப்பட்டுள்ளது. | இந்த நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 835 | இந்த நிதிப் பிரமாணத்திற்கு முரணாக சபைக்கு தலவதுகொட பிரதேசத்தில் கட்டிடமொன்று ஓராண்டு காலப்பகுதிக்காக வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் அதற்காக மாதமொன்றுக்கு ரூபா 30,000 வீதம் ரூபா 360,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாண்டு உடன்படிக்கை காலம் முடிவடைந்த போதும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அக்கட்டிடம் சபையால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன் | இந்த நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பிரிவு | சபையின் தகைமை வாய்ந்த அதிகாரியின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 2019 சனவரி முதல் செப்தம்பர் வரையான காலபகுதிக்குள் அமைச்சு செயலாளரின் முன் அங்கீகார் இல்லாமல் ரூபா 338,089 ஆன மேலதிக படிகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும் | இந்த சுற்றறிக்கையின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஐ) | இலங்கை சனநாயக சேசாஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ii ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவு | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நியமனம் அல்லது பதவி உயர்வு என்பவற்றிற்காக பூர்த்தி செய்ய வேண்டிய முன் நிபந்தனைகள் பூர்த்தி | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுப்பேன் | தாபன விதிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படாமல் முன்னால் தகைமை வாய்ந்த அதிகாரியால் 2019 ஆம் ஆண்டின் போது 07 உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ஒ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை ii ஆம் பிரிவு. | இந்த சுற்றறிக்கைக்கு முரணாக தகைமை வாய்ந்த அதிகாரியால் 35 ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்ததுடன் அந்த ஊழியர்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 3,407,134 கூட்டுத் தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள் ளது. | இந்த சுற்றறிக்கையின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 5,122,202 ஆன நட்டமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 39,051,649 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 33,929,447 ஆல் நட்டம் குறைவடைந்திருந்தது. இந்நட்டத்தை குறைப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,289,122 ஆன மொத்த இலாபம் அடைந்திருக்கையில் 2019 ஆம் ஆணடின் போது ரூபா 33,032,559 ஆன மொத்த இலாபத்தை பெற்றிருந்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 4,978,328 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் உஸ்வெவ தொழிற்சாலையின் ஓடுகள் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 39,200 முதலாம் தர மண் ஓடுகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அந் நிராகரிக்கப்பட்ட ஓடுகளை கொண்டு வருவதற்கும் அதற்குப் பதிலாக ஏரகம தொழிற்சாலையிலிருந்து 39,200 நல்ல ஓடுகளை மீண்டும் வழங்குவதற்காக ரூபா 2,142,468 ஆன நட்டமொன்று மீளாய்வாண்டில் சபைக்கு ஏற்க நேர்ந்தது. | மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாட்டின் பிரகாரம் நிராகரிக்கப்பட்ட ஓடுகளுக்காக நல்ல ஓடுகளை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த அதிகாரி இணக்கத்தை தெரிவித்திருந்தார். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | உற்பத்தி செய்த ஓடுகளை விற்பனை செய்வதற்கு முன்னர் உரிய தரத்தில் இருக்கின்றதா என நன்றாக பரீட்சித்து ஓடுகளை வகைப்படுத்தி மாத்திரம் விநியோகிக்க நடவடிக்க எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒட்டுசுட்டான் தொழிற்சாலை தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி ரூபா 57,500 தொகை விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு சபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு 1 வருடமும் 09 மாதங்களும் கடந்துள்ள போதிலும் குறித்த அறிக்கையை வழங்காமையால் அக்கொடுப்பனவு சிக்கனமற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்கின்றேன். | குறித்த மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நானாவித கடன்பட்டோர் மீதிகள் கால அட்டவணையின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,730,019 தொகையான 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யாத கடன் மீதிகள் காணப்பட்டதுடன் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு முகாமை தவறியிருந்தது. | எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து தீர்வொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | பழைய கடன் மீதிகளை அறவிடுவதற்கும் கணக்குகளை சீராக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,010,675 ஆன வைப்புக்கள் மற்றும் முற்பண கொடுப்பனவு என கூட்டுப் பெறுமானமொன்று காணப்படுவது அவதானிக்கப்பட்டதுடன் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இம்மீதியை கண்டுபிடித்து தீர்வு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து தீர்வொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | பழைய கடன் மீதிகளை தேடி தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையின் 09 தொழிற்சாலைகளுக்கு வெவ்வேறு வர்த்தமானி அறிவித்தல் மூலம் கையளிக்கப்பட்டுள்ள மொத்தம் 492, 03 ரூட், 01 பேர்ச் காணி உரித்தாக இருந்தது. அத்தொழிற்சாலைகளுக்கு இடையே ஏரகம தொழிற்சாலை மற்றும் மஹியங்கன தொழிற்சாலைக்குரிய 326 ஏக்கர், 03 ரூட் 26 பேர்ச் மாத்திரம் கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரித்தாக இருந்ததுடன் காணியை கையேற்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து தீர்வொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகளின் உரித்தினை எழுத்துமூலம் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் எலயாபத்துவ மற்றும் உஸ்வெவ ஆகிய 02 தொழிற்சாலைகளுக்குரிய மொத்தம் 53 ஏக்கர், 16 பேர்ச் காணியின் உரிமை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்து அல்லது அதன் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்து அவற்றை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபை செயற்படுத்திய 05 தொழிற்சாலைகளில் மொத்த பொருள் உற்பத்தி இயலளவு 4,354,000 ஆக இருந்ததுடன் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தொழிற் சாலைகளின் மொத்த பொருள் உற்பத்தி 1,719,786 ஆக இருந்தது, அதன் பிரகாரம் ஆண்டில் உள்ளவாறான உற்பத்தி | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். | விற்பனை தேவைப் பாட்டிற்கு போதியளவு தொழிற்சாலைகளில் உற்பத்தி அளவினை கருத்திற்கொண்டு உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலகுகள் 2,634,214 ஆல் அதாவது 60 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் மொத்த உற்பத்தி அலகுகள் 1,658,683 அதாவது 96 சதவீதம் ஏரகம தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சபைக்குரிய 09 தொழிற்சாலைகளில் 04 தொழிற்சாலைகள் வெவ்வேறு காரணங்களின் பேரில் பல சந்தர்ப்பங்களில் மூடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 05 தொழிற்சாலை களில் மீளாய்வாண்டின் போது உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஏரகம தொழிற்சாலை மாத்திரம் மீளாய்வாண்டில் ரூபா 21,486,471 ஆன இலாபமொன்றை பெற்றிருந்தது. அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 57 சதவீத அதிகரப்பொன்றாக இருந்ததுடன் மஹியங்கன, பிங்கிரிய, உஸ்வெவ மற்றும் யட்டியன ஏனைய 04 தொழிற்சாலைகளும் மீளாய்வாண்டின் போது நட்டத்தை ஈட்டியிருந்தன. | ஏரகம தொழிற்சாலை மாத்திரம் தற்போது உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. | சபையின் நோக்கம் மற்றம் இலக்குகளின் பிரகாரம் மட்பாண்டத்துடன் அண்மித்த உற்பத்தியுடன் தொடர்புடையதாக இருப்பதால் உற்பத்தி பல்வகைப்படுத்தல் மூலம் தொழிற்சாலை செலவினத்தை தீர்வு செய்து கொள்ளல் பொருத்தமாகும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து ஏரகம ஓட்டு தொழிற்சாலை தவிர ஏனைய தொழிற்சாலையின் ஓடு விற்பனை சீக்கிரமாக வீழ்ச்சியடைந்தமையால் ஓடு உற்பத்தி இடைநிறுத்தப் பட்டிருந்தது. 2018, 2019 ஆம் ஆண்டுகளில் அரச கொள்கை மற்றும் ஓடு உற்பத்திக்காக போட்டி காரணமாக சபையின் 07 உற்பத்தி தொழிற்சாலைகளில் ரூபா 30,162,941 உற்பத்தி இருப்பொன்று விற்பனை செய்யப்படாமல் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | அஸ்பஸ்டஸ் தடை அரசினால் நீக்கப்பட்டமை, கூரை ஓடுகளுக்காக பதிலீடுகள் சந்தைக்கு வந்தமை இதற்கான காரணங்களாகும். | உற்பத்தி இருப்புகளை விற்பனை செய்வதற்கும் சந்தை தேவைப்பாட்டின் பேரில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1975 பெப்ரவரி 21 ஆந் திகதி 151/71 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொல்லாகல விஜய ஓட்டுத் தொழிற்சாலை சபையின் கீழ் கையேற்கப்பட்டது. 1986 ஏப்ரல் 30 ஆந் திகதய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இத்தொழிற்சாலை களணிப் பிரதேசத்தின் நபரொருவருக்கு எழுத்துமூல உடன்படிக்கையொன்று இல்லாமல் கையளிக்கப்பட்டிருந்த போதும் அவரால் இணங்கப்பட்ட பிரகாரம் ரூபா 3,885,000 தொகையை கொடுப்பனவு செய்யாமை காரணமாக 1995 யூலை 19 ஆந் திகதிய சட்டமா அதிபரின் ஆலோசணையின் பிரகாரம் ‘‘07 நாட்களுக்குள் அனைத்து அசையாத மற்றும் அசையும் சொத்துக்களை மீண்டும் சபைக்கு பெற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.’’ கணக்காய்வுத் திகதியான 2020 ஆகஸ்ட் மாதம் வரை இச்சொத்துக்களை கையேற்று கணக்கீடு செய்து நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. முன்னால் தகைமை வாய்ந்த அதிகாரி இந்த ஆதனங்களுக்காக 2019 மே 16 ஆந் திகதி ரூபா 2,476,000 ஆன நிலுவை வாடகையாக பணமாக பெற்றுக் கொண்டிருந்தார். | குறிப்பிட்ட விடயங்களை ஏற்றுக்கொள்கின்றேன். | இந்த விஜய ஓட்டுத் தொழிற்சாலை தொடர்பாக ஆராய்ந்து பாரத்து அமைச்சரவை தீர்மானம் மற்றும் அரசின் ஆலோசணையின் செயற்பட வேண்டும். |

**3.5 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3 பிரிவின் பிரகாரம் பெறுகை செயற் பாட்டிற்காக மொத்த கிரய | இதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதும் 2019 ஆம் ஆண்டின் போது ஏரகம தொழிற்சாயின் கூரை மற்றும் பீளி திருத்தங்களுக்காக மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் 02 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் பயன்படுத்தப்பட்டு ரூபா 668,195 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2006 இன் சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கின்றேன். | இந்த சுற்றறிக்கையின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் iii ஆம் பிரிவின் 16(2) பிரிவின் பிரகாரமும் 2003 ஜுன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் நல்லாளு கைக்கான வழிகாட்டல்கள் கோவையின் 6.5.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் சபையின் 2019 ஆம் 05 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2020 யூலை 22 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 03 மாத காலமாக கொவிட் தொற்று காரணமாக கணக்குகளை அங்கீகரித்துக் கொள்ளவும் சமர்ப்பிக்கவும் தாமதமாகியது. | இச்சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 08 துறைகளை மேவுகை செய்யக்கூடிய வகையில் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது இச்செயன் முன்னேற்ற அறிக்கையை பரீட்சித்த போது இரண்டு துறைகளில் கணக்காய்வு பரிசோதனை மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை. மேவுகை செய்யப்பட்ட துறைகளை அடிப்படையாக கொண்டு விநியோகிக்கப்பட்ட 06 உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் தகுதி வாய்ந்த அதிகாரியால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு சுதந்திரமாக கடமை புரிவதற்கு தடையொன்று காணப்பட்டது. | உள்ளக கணக்காய்வு பிரிவு தடையின்றி செயற்படுவதற்கு செயற்பட வேண்டும். |

### 4.3 கணக்காய்வு குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டில் ஒரு குழுக் கூட்டம் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தது. | தகுதி வாய்ந்த அதிகாரிக்கு வழங்கிய ஆலோசணையின் பிரகாரம் தீர்மானமொன்று வழங்கப்படாமை காரணமாக கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | இந்த சுற்றறிக்கையின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 4.4 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ 12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் நிதயாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை | 2019 ஆம் ஆண்டின் போது இவ்வறிக்கை அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது | இச்சுற்றிக்கையின் பிரகாரம் பாராளுமான்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் 2019 யூலை மாதம் வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.